இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 13-01-2025

# ‘பொல்லாத’ சார்...

**எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்கு மாபெரும் களங்கம் என்பது பொள்ளாச்சி சம்பவம் ஆகும். அந்த விவகாரத்தை அப்போதும் மறைத்தார் பழனிசாமி. இப்போதும் மறைக்கப் பார்க்கிறார் பழனிசாமி.**

‘புகார் கொடுக்கப்பட்டு 12 நாட்களுக்குப் பிறகுதான் நீங்கள் நடவடிக்கையைத் தொடங்கினீர்கள்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பழனிசாமியைப் பார்த்து குற்றம் சாட்டினார்கள். ‘இல்லை, 24 ஆம் தேதி புகார் கொடுத்தார்கள். 25 ஆம் தேதி வழக்குப் பதிவு செய்துவிட்டோம்’ என்று பழனிசாமி பொய் சொன்னார். ‘நான் அந்த ஆதாரங்களை நாளை பேரவைத் தலைவரிடம் கொடுக்கிறேன்’ என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன்படி மறுநாளே அதற்கான ஆதாரங்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இதைத் தொடர்ந்து, ‘முதலமைச்சர் அளித்த ஆதாரம்தான் உண்மையானது’ என்று பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் அறிவித்தார்கள்.

2019 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் நடந்தது. “பிப்ரவரி 12 ஆம் தேதி இந்தச் சம்பவம் நடந்துள்ளது. 19 ஆம் தேதி பாதிக்கப்பட்ட பெண்ணின் சகோதரர், காவல் துறை கண்காணிப்பாளரைச் சந்தித்து புகார் தருகிறார். அவர் அதனை டி.எஸ்.பி.யை பார்த்து கொடுங்கள் என்று சொல்கிறார். இவர்களை 22 ஆம் தேதிதான் டி.எஸ்.பி. பார்க்கிறார். பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுங்கள் என்று சொல்கிறார் அவர். பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் 24 ஆம் தேதிதான் புகாரை வாங்குகிறார்கள். பாதிக்கப்பட்ட பெண்ணிடம் கையெழுத்து வாங்கி 26 ஆம் தேதிதான் வழக்குப் பதிவு செய்துள்ளார்கள். இதுதான் உண்மை” என்று பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் தீர்ப்பளித்துள்ளார்கள்.

இந்தத் தீர்ப்பை அமைதியாக உள்வாங்கவில்லை அ.தி.மு.க. இதுவும் ஒரு நாடகம் ஆகும். “என்னுடைய அறைக்கு வந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள், ‘இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள்’ என்று சொன்னார்கள்” என்று பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் சொன்னார்கள். பேரவைத் தலைவர் அறைக்குச் சென்று, ‘இத்தோடு இப்பிரச்சினையை முடித்துக் கொள்ளுங்கள்’ என்று சொல்லி விட்டு, எதற்காக பேரவைக்குள் வந்து பிரச்சினை செய்ய வேண்டும்? அறைக்குள் ஒரு பேச்சு, பேரவைக்குள் ஒரு பேச்சு ஏன் பேச வேண்டும்?

**‘பொல்லாத’ சார் ஆன பழனிசாமி, பேரவைக்கு வந்து விளக்கம் அளித்திருக்க வேண்டும். பேரவைத் தலைவர் அப்பாவு தீர்ப்பு அளித்தபிறகு, பொதுவெளியில் பேட்டி அளித்த பழனிசாமி, “பொள்ளாச்சி வழக்கை பொறுத்தவரையில் பாதிக்கப்பட்டவர்கள் அளிக்கும் புகாரின் அடிப்படையில் தான் வழக்குப் பதிவு செய்ய முடியும். யாரைக் குற்றம் சாட்டுகிறார்களோ அவர்களைத்தான் கைது செய்ய முடியும்” என்று சொல்லி இருக்கிறார் பழனிசாமி. அப்படியானால் போலீஸ் எதற்கு? பழனிசாமி கையில்தான் அதிகாரம் தரப்பட்டது!**

பாதிக்கப்பட்ட ஒருவர் புகார் தராவிட்டால், குற்றம் என்பது நடந்தால் பழனிசாமி நடவடிக்கை எடுக்க மாட்டாரா? பாதிக்கப்பட்டவர், சொன்னவரைத் தாண்டி ஒரு குற்றச்சம்பவத்தில் வேறு யாராவது இருந்தால் பழனிசாமி நடவடிக்கை எடுக்க மாட்டாரா? உள்துறையை எந்த லட்சணத்தில் கவனித்தார் பழனிசாமி?

பொள்ளாச்சி சம்பவம் என்பது இரண்டு மூன்று ஆண்டுகளாக ஒரு கும்பல் தொடர்ந்து இதுபோன்ற பாலியல் குற்றங்களைச் செய்துள்ளது. பெண்களைக் கடத்திச் சென்று படம் எடுத்து மிரட்டி இருக்கிறது. பழனிசாமியின் ஆட்சி இதை வேடிக்கை பார்த்துள்ளது. பாதிக்கப்பட்ட ஒரு பெண் வந்து புகார் கொடுக்கிறார். அதனையும் வழக்குப் பதியாமல் வைத்துள்ளார்கள். உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் வாங்காததால் உயர் அதிகாரியைச் சந்தித்து கொடுக்கிறார்கள். அவர், தனக்கு கீழ் உள்ள அதிகாரியை பார்க்கச் சொல்கிறார். அவரைச் சந்தித்ததும், அவர் தனக்கு கீழ் உள்ள இன்ஸ்பெக்டரைப் பார்க்கச் சொல்கிறார். இதற்கு மத்தியில் அன்றைய அ.தி.மு.க. அமைச்சரைப் போய் பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் பார்க்கிறார்கள். அவர் உள்ளூர் காவல் துறைக்குச் சொன்னபிறகுதான் புகாரை வாங்குகிறார்கள். அதற்கு இரண்டு நாள் கழித்துதான் வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

**வழக்குப் பதிவு செய்த பிறகாவது அ.தி.மு.க. ஆட்சி என்ன செய்தது? யார் புகார் கொடுத்தார்களோ அவர்களை ஒரு கும்பல் தாக்கியது. அடித்து உதைத்தது. ‘பொல்லாத’ சார் பழனிசாமி ஆட்சியில் தான் இது நடந்தது.**

பிப்ரவரி 26 ஆம் தேதி செந்தில், பாபு, மணி, ராஜகோபால் ஆகிய நால்வர் கைது செய்யப்பட்டனர். முக்கிய குற்றவாளியான திருநாவுக்கரசுவைக் கைது செய்யவில்லை. ஏனென்றால் இவர் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர். பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்களைத் தாக்கிய பார் நாகராஜனை அ.தி.மு.க. ஆட்சி கைது செய்யவில்லை. ஏனென்றால் இந்த பார் நாகராஜன் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர். அன்றைய அ.தி.மு.க. அமைச்சர்கள் சிலருக்கு நெருக்கமாக இருந்துள்ளார். மார்ச் 5-ஆம் தேதிதான் அ.தி.மு.க.வைச் சேர்ந்த திருநாவுக்கரசை காவல்துறை கைது செய்தது. மார்ச் 10-ஆம் தேதி சபரிராஜன், சதீஷ், வசந்தகுமார் ஆகிய மூவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். மார்ச் 12-ஆம் தேதி சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட்டது. மார்ச் 13-ஆம் தேதி பொள்ளாச்சி சம்பவம் சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றப்பட்டது.

**2019-ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் தேதி குற்றவாளிகள் மீதான குண்டர் சட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் ரத்து செய்யப்பட்டது. அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஹரோன் பால், பாபு ஆகிய இருவரின் பெயரை முதல் தகவல் அறிக்கையில் சேர்க்காமல், அ.தி.மு.க. ஆட்சி காப்பாற்றியது. 2020 ஜனவரி 11-ஆம் தேதி பால் என்பவரை காவலில் எடுத்து சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டது. 2020 பிப்ரவரி 19-ஆம் தேதி அ.தி.மு.க. கவுன்சிலர் ஜேம்ஸ் ராஜா என்பவரின் கார் பறிமுதல் செய்யப்பட்டது. முன்னாள் அ.தி.மு.க. சேர்மன் ஒருவருக்கு இதில் தொடர்பு இருப்பதாக 2020 பிப்ரவரி 19-ஆம் தேதி அன்று அருளானந்தம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.**

2019 பிப்ரவரி 12 ஆம் தேதி நடந்த சம்பவத்துக்கு 2020 ஆம் ஆண்டு பிப்ரவரியில் சி.பி.ஐ. வந்துதான் உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்தது. **இந்த பொல்லாத சாரான பழனிசாமி, பொல்லாதவர்கள் பலரையும் காப்பாற்றும் வேலையை மட்டும் தான் பார்த்துக் கொண்டு இருந்தார். அதுதான் உண்மை.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.1.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2025 விழாவில், மொரிஷியஸ் நாட்டின் வெளியுறவுத் துறை, இணை அமைச்சர் ராஜன் நரசிங்கன் அவர்கள் சந்தித்துப் பேசினார்.



நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நேற்று (12.1.2025) நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் 2025 விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன், இவ்விழாவில் கலந்துகொண்ட அயலகத் தமிழர்கள் செல்பி எடுத்துக் கொண்டனர்.

### வேடதாரி அ.தி.மு.க.வை இஸ்லாமியர்கள் நம்ப மாட்டார்கள் – இந்தியாவிலேயே

# சிறுபான்மையினர் பாதுகாப்பாக இருப்பது தமிழ்நாட்டில்தான்!

## கடலூரில் நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாட்டில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**கடலூர், ஜன. 13 - கடலூர் மாவட்டம், லால்பேட்டையில் உள்ள லால்கான் மைதானத்தில் 11.01.2025 - சனிக்கிழமை, நடைபெற்ற கடலூர் தெற்கு மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் சிறப்புரையாற்றுகையில், ‘இந்தியாவிலேயே சிறுபான்மையினர் பாதுகாப்பாக இருப்பது தமிழ்நாட்டில்தான்’ என குறிப்பிட்டார்.**



இம்மாநாட்டில் அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: “தலைவர் கலைஞர் அவர்களுக்கு ஒரு முறை சிறுபான்மை அமைப்பினர் நன்றி தெரிவிக்கும் விழா நடத்தினார்கள். அதில் கலந்துகொண்ட தலைவர் கலைஞர், ‘நீங்கள் ஏன் எனக்கு நன்றி தெரிவிக்கிறீர்கள்? நான் என்ன மூன்றாவது நபரா? நான் உங்களில் ஒருவன் தானே...’ என்று சொன்ன தலைவர் தான் அவர்.

திமுகவுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் இடையிலான உறவு இன்று நேற்றல்ல... பெரியார் காலத்தில் இருந்தே தொடர்கிறது. கடவுள் மறுப்பை தொடர்ந்து பேசிய பெரியார் பாராட்டிய கருத்து ஒன்று இருக்கிறது என்றால்.... சாதிய கட்டமைப்பை உடைப்பதற்காக, சாதிய கொடுமைகளை எதிர்ப்பதற்காக பல்வேறு இடங்களில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்று வரை சாதிய இழுக்கை இன்றுவரை கடந்துவிட முடியவில்லை.

ஆனால் இஸ்லாமிய மதத்துக்கு மதம் மாறியிருக்கும் சகோதர சகோதரிகளும் இந்து மதத்தில் இருந்து இஸ்லாமுக்கு சென்றபோது தங்களது சாதி என்ற அடையாளத்தை தூக்கி எறிந்து விட்டு சென்றார்கள் என பாராட்டினார் பெரியார்.

இன்றைக்கு பெரியாரை பற்றியெல்லாம் சிலர் விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த பெயரைச் சொல்லக் கூட தகுதியில்லாதவர்கள் எல்லாம் விமர்சிக்கிறார்கள். அதற்கு நாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் கூட கிடையாது.

எந்த சாதியைச் சேர்ந்தவர் என்று நினைவு கூட கிடையாது... என் மூதாதையர் எந்த சாதியைச் சுமந்திருந்தார் என்று தெரியாது. சாதி கடந்து மனிதர்களாக, தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று இஸ்லாமியர்களைப் பார்த்து தந்தை பெரியார் பாராட்டிய வரலாறு நமக்கு உண்டு.

அதேபோல பேரறிஞர் அண்ணாவோடு நமது மரியாதைக்குரிய காயிதே மில்லத் அவர்களின் உறவு, தொடர்பு... அண்ணாவின் மறைவுக்குப் பின் யார் முதலமைச்சராக வேண்டும் என்ற நிலையில் காயிதே மில்லத் அவர்கள் தனக்குத் தெரிந்த திமுக பிரமுகர்களை அழைத்து, ‘தமிழ் நாடு காக்கப்பட வேண்டுமானால் தலைவர் கலைஞர்தான் முதல்வராக வரவேண்டும்’ என்று எடுத்துச் சொல்லி தலைவர் கலைஞர் முதல்வராக வருவதற்கு உறுதுணையாக நின்ற வரலாறை நாம் மறந்துவிட முடியாது.

தலைவர் கலைஞரும், பேரறிஞர் அண்ணாவும் முதல் முறையாக சந்தித்த நிகழ்வு கூட ஓர் இஸ்லாமிய நிகழ்வுதான். அண்ணா ஒரு முறை திருவாரூருக்கு ஓர் இஸ்லாமிய மாநாட்டுக்கு வந்திருந்தபோது, ‘தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிற கருணாநிதி யார்? அவரை அழைத்துக் கொண்டு வாருங்கள்’ என்று கூறினார். அப்போதுதான் இருவரும் முதல் முறையாக சந்திக்கிறார்கள்.

தலைவர் கலைஞர்கள் அவர்கள் பல முறை வேடிக்கையாக சொல்லுவார். ‘அந்த மாநாட்டிலே என்னை பார்த்த அண்ணா அவர்கள், உன்னை பெரிய மனுஷன்னு நினைச்சேன். ரொம்ப சின்ன பிள்ளையா இருக்கியே... போய் நல்லா படி...’ என்று சொல்லியனுப்பினார். அண்ணா சொல்லி நான் கேட்காமல் இருந்தது நான் படிக்காமல் விட்டதுதான்’ என்று சொல்லுவார்.

அண்ணா சொன்னதுபோல பள்ளிக்கூடம் சென்று படிக்கவில்லையே தவிர, தன் வாழ்நாள் முழுதும் கடைசி மூச்சு வரை அண்ணாவை படித்த தலைவர் தான் நமது தலைவர் கலைஞர்.

**கண்ணிய மிகு காயிதே மில்லத்தின் நம்பிக்கையை காத்தவர் கலைஞர்!**

இப்படி நமக்கான தொடர்பு, உறவு தேர்தல்களை எல்லாம் கடந்தது. மருத்துவமனையில் இறுதிப்படுக்கையில் கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்கள் இருந்தபோது தலைவர் கலைஞர் அவரை பார்க்கச் சென்றார். அப்போது கலைஞரின் கையைப் பிடித்து, ‘எனது மக்களை நான் உங்களின் கைகளில் ஒப்படைத்துவிட்டுப் போகிறேன்’ என்று சொல்லி, உங்களை எல்லாம் தலைவர் கலைஞரின் கைகளில்தான் நம்பி ஒப்படைத்தார்.

அந்த நம்பிக்கை தன் வாழ்நாளெல்லாம் கலைஞர் உரியவராக இருந்தார். அவரைத் தொடர்ந்து நமது முதல்வர் அண்ணன் தளபதியும் இன்று வரை அந்த நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் சிறுபான்மை மக்களுக்கு அரணாக திகழ்கிறார்.

சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை எல்லாம் கேட்பதற்கு முன்பாகவே செய்துகொடுக்கும் ஆட்சிதான் தி.மு.க. ஆட்சி.

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு வந்த பிறகு இஸ்லாமிய பிள்ளைகளின் கல்வி ஸ்காலர்ஷிப்பை நிறுத்தினார் கள். ஆனால் அந்த ஸ்காலர்ஷிப்பை தந்த தலைவர்தான் நமது முதல்வர். இங்கே பேசியநவாஸ்கனிதி.மு.க.சிறுபான்மை மக்களுக்கு செய்தவற்றை எல்லாம் பட்டியலிட்டுக் காட்டினார்.

இத்தனை சகோதரிகள் இங்கே அமர்ந்து ஓர் அரசியல் கூட்டத்திலே பங்கேற்பதை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. நமது தலைவர் கலைஞர் அவர்கள் திருமண உதவித் திட்டம் என்று கொண்டுவந்தார். எட்டாவது வரை படித்தால் பெண்ணின் திருமணத்துக்கு நான் உதவுகிறேன் என்று அறிவித்தார் கலைஞர். இப்போது அண்ணன் தளபதி புதுமைப் பெண் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார். அதை அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்க ளுக்கும் விரிவு படுத்தியிருக்கிறார்.

இங்கே மேடையில் பேராசிரியர் என்னோடு பேசிக் கொண்டிருந்த போது, ‘ஒரு காலகட்டத்தில் திருமண பத்திரிகைகளில் மணப்பெண்ணின் பெயரையே போட மாட்டார்கள். இன்று திருமணப் பத்திரிகைகளில் ஆண்களை விட அதிகமாக பெண்கள் படித்திருக்கிறார்கள். அது பெருமையாக இருக்கிறது’ என்று குறிப்பிட்டார்.

தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்த இட ஒதுக்கீட்டை பயன்படுத்திக் கொண்டு, இஸ்லாமிய சகோதர சகோதரிகளும் எல்லா துறைகளிலும் மருத்துவர்களாக, பொறியாளர்களாக இஸ்லாமிய சகோதரிகள் இருப்பதை பார்க்கும்போது எந்த விதமான மாற்றத்தை திராவிட மாடல் அரசு கொண்டு வந்திருக்கிறது என்று பார்க்கும்போது பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

புதுமைப் பெண் திட்டத்தில் மாணவிகளைப் பார்த்து, ‘உங்களை எல்லாம் எனது மகள்களை போல பார்க்கிறேன். படியுங்கள் படியுங்கள்’ என்று சொல்கிற அற்புதமான முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.

இங்கே தமிழ்நாட்டில் இருக்கிற இஸ்லாமிய சகோதரர்கள் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்கள். பாஜக ஆட்சி செய்கிற மாநிலங்களில் இஸ்லாமிய சகோதரர்கள், சகோதரிகளுக்கு பாதுகாப்பே இல்லை. உடுத்த நினைக்கும் உடையை உடுத்த உரிமை கிடையாது, உண்ண நினைக்கும் உணவை உண்ண உரிமை கிடையாது, வழிபாடு செய்ய உரிமை கிடையாது, இப்படி அனைத்து அடிப்படை மனித உரிமைகளும் இஸ்லாமிய சகோதர்களிடம் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கப்படும் சூழலை பா.ஜ.க. ஏற்படுத்தியிருக்கிறது.

உணவு எடுத்துச் செல்லும் சிறுவனை என்ன வச்சிருக்கே என்று அடித்து பிடுங்கும் சம்பவத்தை பார்க்கிறோம்.

முத்தலாக் தடை சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது நான் அதை எதிர்த்துப் பேசுகிறேன். அப்போது முன்னாள் அமைச்சர் ஒருவர் என்னிடம், ‘இஸ்லாமிய பெண்கள் மீது உங்களுக்கு என்ன கோபம்? அவர்களை பாதுகாப்பதற்காகத்தானே இந்த சட்டம் கொண்டுவரப்படுகிறது’ என்று கேட்டார்.

**இது எந்த வகையில் நியாயம்?**

அதற்கு அவரிடம், ‘அது எப்படி? ஒரு கிறிஸ்துவ கணவரோ, இந்து கணவரோ தன் குடும்பத்தை கவனிக்காமல் போனால் அவர்களுக்கு தண்டனை கிடையாது, வழக்குதான் தொடர முடியும். ஆனால் இஸ்லாத்தில் இல்லாத முத்தலாக் என்பதை சொல்லி ஒருவர் குடும்பத்தை கவனிக்காமல் போனால் அவருக்கு ஒரு வருடம் சிறை தண்டனை. மற்றவர்கள் மீது இல்லாத அக்கறை இஸ்லாமிய சகோதரிகள் மீது ஏன்? இது இஸ்லாமிய சகோதரிகள் மீது இருக்கும் அக்கறை அல்ல... இஸ்லாமிய சகோதரர்களை எப்படியெல்லாம் சிறையில் தள்ளலாம் என்பதற்கான திட்டம்’ என்றேன்.

இன்றைக்கு வக்ஃப் போர்டு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். எந்த கோயிலிலும் இந்துக்கள் இல்லாதவர்களை போர்டு மெம்பராக சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் வக்ஃப் போர்டு வாரியத்தில் இஸ்லாமியர் அல்லாத யார் வேண்டுமானாலும் இருக்கலாம். இது எந்த நியாயம்? அதே போல இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் தங்கள் சொத்துகளை வக்ஃப் வாரியத்துக்கு எழுதிவைக்க முடியாது. இது என்ன நியாயம்? இஸ்லாமியராக இருந்தால்தான் சொத்துகளை எழுதி வைக்க முடியும்,.

அதைத் தாண்டி இந்த சட்டத்தில் மாநில உரிமைகள் பறிக்கப்படுகிறது. எல்லாவற்றையும் ஒன்றிய அரசு பிடுங்கி வைத்துக் கொள்கிறது. இது எதற்காக? இந்த சொத்துகளை எல்லாம் பிடுங்கி அதானிகளின், அம்பானிகளின் கையில் கொடுப்பதற்கா என்ற சந்தேகம் எழுகிறது.

ஒவ்வொரு சட்டத்திலும் ஒவ்வொரு வகையிலும் சிறுபான்மை மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தி அதில் குளிர் காய்ந்து வருகிறது பாஜக. ஆனால் அவர்களின் முயற்சி, வழிமுறைகள் தமிழ்நாட்டில் எடுபடவில்லை. மற்ற மாநிலங்களில் இஸ்லாமியர்கள் மதம் மாறியபோது மொழியும் மாறியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தமிழால் தமிழர்களாக ஒன்றாய் நிற்கிறோம். நானும் நீங்களும் பேசக் கூடிய மொழி தமிழ்.

அதுதான் நம்முடைய அடையாளம். நான் யார் என்பதை நிர்ணயிக்கும் என்னுடைய மொழியை புரிந்துகொண்ட உணர்ந்துகொண்ட நீங்கள்தான் எனக்கு உறவினர். ஆனால், இதை புரிந்துகொள்ளாத பாஜக நம்மிடையே பிரிவினைக்கான வழிகளை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

மதத்தால் பிரிந்தால் என்றால் மெஜாரிட்டி,மைனாரிட்டி என்று வரும். ஆனால் மொழியால் இணைந்தோம் என்றால் நாம் மட்டும்தான் இந்த மாநிலத்தில் மெஜாரிட்டி. வேறு யாருக்கும் இடமில்லை.

இந்த உணர்வோடு நாம் தொடர்ந்து போராட வேண்டும். நம்முடைய உரிமைகளுக்காக நாம் போராடும்போது தமிழ்நாட்டைப் போன்ற இந்தியாவை உருவாக்கிக் காட்டுவோம். வரக் கூடிய தேர்தல் என்பது தமிழ்நாட்டை மட்டும் பாதுகாக்கும் தேர்தல் இல்லை. அதைத் தாண்டி இந்த நாட்டை, இந்த நாட்டிலே இருக்கும் இஸ்லாமியர்கள், சிறுபான்மை யினர்களுக்கும் சேர்த்துதான் நம் நாடு. நமது அடிப்படை சட்டங்களில் மனிதன் ஒன்று என்ற மனிதாபிமானத்திலே நம்பிக்கை இருக்கும் நாடு. வரக் கூடிய சட்டமன்றத் தேர்தல் இந்த நாட்டுக்கே வழிகாட்டும் தேர்தல்.

நாங்கள் தனியாக வந்துவிட்டோம் என்று சொல்லி அன்றும், இன்றும் தொடர்ந்து பா.ஜ..கவுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருக்கும் அதிமுக போன்ற வேடதாரிகளை நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். அந்த தெளிவோடு வரக் கூடிய தேர்தலை சந்திப்போம். இதை நாடு முழுதும் எதிரொலிக்கச் செய்வோம்”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

இதில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்பி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன், பாராளுமன்ற உறுப்பினர்கள் நவாஸ் கனி, முகம்மது பஷீர், சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்!



கடலூர் மாவட்டம், லால்பேட்டையில் உள்ள லால்கான் மைதானத்தில் நடைபெற்ற, கடலூர் தெற்கு மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரையாற்றினார். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நவாஸ்கனி, முகம்மது பஷீர், சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.